முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1180

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

22.12.2022, வியாழக்கிழமை

1. தர்ம ஞானியே அரங்கா போற்றி
   தவசியாய் வாழும் தேசிகா போற்றி
   பேருலகை காக்கும் மகா சக்தியாக
   பிரணவச் சுடரேற்றி அருளுகின்ற அரங்கனே போற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும் இனிதே
   புகலுவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் மார்கழி மாதம் 07 ம் நாள் 22.12.2022, வியாழக்கிழமை)
   ஆற்றல்பட இந்த கலியுகம் மாற்றம்
   அரங்கன் தயவால் அடையக்கூடும்
3. மாற்றத்தை அடைய உலகமக்களெல்லாம்
   மகான் அரங்கன் திருவடியை வணங்கி வரவேண்டும்
   வேண்டி அரங்கன் முழுமதி காலம் நடத்தும்
   வினைபோக்கும் ஞானிகள் பூஜை தனில்
4. தொண்டோடு கலந்து தீட்சை பெற்று
   தேசிகன் தர்மத்தில் பொருளுதவி செய்து
   செய்துகொண்டு அரங்கா முருகா என
   ஜெபதபங்கள் நித்தம் இல்லில் செய்துவர
5. வருகவே உலகோர்க்கு ஞானவழி
   வல்லமையான மாற்றம் இனிதே கண்டு
   தர்மகுணம் தயவான செயல்வடிவாகி
   தரணியோரெல்லாம் ஞானிகளாக உண்டான
6. ஆனதொரு வாய்ப்பு கனியக்கூடும்
   அரங்கன் ஆசியால் இந்த அற்புதம் நிகழும்
   வரங்கள் தந்து அரங்கனுள் யானிருக்க
   வடிவேலன் என் காட்சிபெற விரும்பும் அன்பர்களும்
7. அன்பர்களும் ஞானவாழ்வு கொள்ள விரும்புகின்ற மாந்தர்களும்
   அணுகி அரங்கன் வழி தொடர்ந்து வர சிந்தை தெளிவு சிறப்பறிவு கூடி
   விந்தைபட கந்தன் என் அருளாசிபெற்று இனிதே
   வைபகத்தில் ஞானிகளாக ஆற்றல் பெறுவர்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–